**அனுப்புநர்**

ந.லதா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை - 600 006.

**பெறுநர்**

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
   தென்காசி, இராணிப்பேட்டை,
   திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி,
   செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை.
2. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்
   உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண்.** 005985/எச்1/2025 **நாள்:** 25.07.2025

ஐயா/அம்மையீர்,

**பொருள்:** சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - ஜூன் 2025 மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு– விடைத்தாள் நகல் விண்ணப்பங்கள் பெறுவது மற்றும் ஆன்-லைனில் பதிவேற்றம் செய்வது குறித்த அறிவுரைகள் - சார்பு.

**பார்வை:** இவ்வலுவலக இதே எண்ணிட்ட செய்திக் குறிப்பு, நாள்.24..07.2025

-----

பார்வையில் காணும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஜூன் 2025, மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு 25.07.2025 அன்று பிற்பகல் முதல் தேர்வு முடிவுகள் மதிப்பெண் பட்டியல்களாக பதிவிறக்கம் செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் 28.07.2025 **மற்றும்** 29.07.2025 **ஆகிய இரு நாட்களில்** அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம்/ முதன்மைக் கல்வி அலுவலகம் சென்று விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து உதவி இயக்குநர்கள் / தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, மயிலாடுதுறை, காரைக்கால் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் புதுச்சேரி இணை இயக்குநர் (கல்வி) ஆகியோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றி தங்களது மாவட்டத்தில் உள்ள

தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID, password-ஐ பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து தேவைப்படும் நகல்களை எடுத்துக் கொள்ளவேண்டும்.

2 தேர்வர்கள் விடைத்தாள் நகல் கோரி வரும்பொழுது, அன்னாரிடம் ஒரு படிவத்தை அளிக்க வேண்டும். எந்தெந்த பாடங்களுக்கு விடைத்தாளின் நகல் தேவை? என்ற விவரத்தினை மாணவர்கள் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தி அப்படிவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். விடைத்தாள் நகலுக்குரிய தொகையினைப் பணமாக பெற்றுக் கொள்ள வேண்டும்.

<u>விடைத்தாள்நகல் (Scan Copy of the Answer Script) - கட்டணம்:</u>

ஒவ்வொரு பாடத்திற்கும் : ரூ.275/-

3. விடைத்தாள் நகல் (Scan Copy of the Answer Script) கோரி விண்ணப்பிக்கும் பாடங்களுக்கு, தற்போது மறுகூட்டலோ (அல்லது) மறுமதிப்பீட்டிற்கோ (Revaluation) விண்ணப்பிக்க இயலாது.

4. விடைத்தாள் நகல் பெற்ற பின்னரே மதிப்பெண் மறுகூட்டலுக்கு / மறுமதிப்பீட்டிற்கு (Revaluation) விண்ணப்பிக்க வேண்டும்.

6. தேர்வர்களிடமிருந்து பூர்த்தி செய்த படிவத்தையும், கட்டணத் தொகையினையும் பெற்றவுடன், படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விவரங்களை தேர்வர்களிடம் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே இணையதளத்தில் அவ்விவரங்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் பதிவேற்றம் செய்து, அதற்கான ஒப்புகைச் சீட்டினை சம்பந்தப்பட்ட தேர்வர்களிடம் வழங்குதல் வேண்டும்.

7. இவ்வாறு ஒவ்வொரு நாளும் பணி முடிந்தவுடன், Daily summary report / Daily detailed report இவ்விரண்டையும் click செய்தால் அன்றைய தினம் பதிவு செய்த விவரங்கள் தங்களுக்குக் கிடைக்கும். இந்த அறிக்கையினை பதிவிறக்கம் செய்துகொண்டு, அன்றைய தினம் பதிவு செய்த விண்ணப்பங்களையும் மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டணத் தொகையினையும் ஒப்பிட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

8. 30.07.2025 அன்று பிற்பகல் FINAL SUMMARY REPORT / FINAL DETAILED REPORT என்ற பகுதியினை click செய்தால் தங்கள் அலுவலகத்தில் விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பித்த தேர்வர்கள் விவரங்கள், விண்ணப்பித்த பாடங்கள், பெறப்பட்ட கட்டணத்தின் மொத்தத் தொகை ஆகிய விவரங்கள் தெரியவரும்.

அவ்விவரங்கள் பெறப்பட்டபின் விடைத்தாள் நகலிற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையினை பட்டியலிட்டு, அதனை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி விடைத்தாள் நகல் விண்ணப்பக் கட்டணத்தினை செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | PAO (South), Chennai |
| Department receiving receipts | 04304 - Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 - Accounts Officer |
| கணக்குத் தலைப்பு | 0202 01 102 AA 22711 - Copying / Scanning |

மேற்கண்டவாறு தனித்தேர்வர்களின் விடைத்தாள் நகல் விண்ணப்பக் கட்டணத் தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் FINAL SUMMARY REPORT ஆகியவற்றினை இணைத்து திரு.கோ,சுரேஷ்ராஜா, துணை இயக்குநர் (பொது) (பொ)), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் வழியாக 04.08.2025 -க்குள் அனுப்பி வைத்திட வேண்டும்.

இணைப்பு: விடைத்தாள் நகலுக்கான தொகையினை இணையதளத்தில் செலுத்துவதற்கான வழிமுறைகள்.

ஒம்/-

இயக்குநர்

**<u>நகல்</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்) } -தகவலுக்காக

3. தொழில்நுட்பப் பிரிவு (அலுவலகம்)
4. கண்காணிப்பாளர், அ3 பிரிவு (அலுவலகம்)
5. கண்காணிப்பாளர், எச்3 பிரிவு (அலுவலகம்)